

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.9.2023) சென்னையில் நடைபெற்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுந்தர் மோகன் அவர்களின் மகன் எஸ். சச்சின் அக்ஷயா புவனேஷ்வரன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.9.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் சி. பரிமேலழகன், துணை அமைப்பாளர் எம். பார்த்திபன் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில், மீனவ மக்களின் நல்வாழ்விற்காக மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையை 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும், மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பட்டாக்கள், மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன், 1000 நாட்டுப் படகு மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள், மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எண்ணெய் அளவு உயர்த்தப்படும், மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அலகுத் தொகை உயர்த்தப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எம். எச். ஹசன் மௌலானா, அரவிந்த் ரமேஷ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர்.கே.சு.பழனிசாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.9.2023) தலைமைச் செயலகத்தில், சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் மகள் திருமதி பிரபாராணி மற்றும் குடும்பத்தினர், தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலா மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் சந்தித்து, தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 66வது வீரவணக்க நாள் விழா அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தமிழ்நாடு அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எஸ். முருகேசன் ஆகியோர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்

## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம் 2–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 08.09.2023 வெள்ளிக்கிழமையும், கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 09.09.2023 சனிக்கிழமையும், விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 10.09.2023 ஞாயிற்றுக்கிழமையும், திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகங்களுக்கு 11.09.2023 திங்கள்கிழமையும் நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மண்டலம்–2

**நேர்காணல் தேதி : 08.09.2023, தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | கடலூர் கிழக்கு | காலை 9.30 மணி |
| 2 | கடலூர் மேற்கு | மதியம் 2.00 மணி |

**நேர்காணல் தேதி : 09.09.2023, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருவம், கள்ளக்குறிச்சி.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி தெற்கு | காலை 9.30 மணி |

**நேர்காணல் தேதி : 09.09.2023, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி வடக்கு | மதியம் 2.00 மணி |

**நேர்காணல் தேதி : 10.09.2023, கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கம், விழுப்புரம்.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | விழுப்புரம் வடக்கு | காலை 9.30 மணி |
| 2 | விழுப்புரம் தெற்கு | மதியம் 2.00 மணி |

**நேர்காணல் தேதி : 11.09.2023, அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் மேற்கு | காலை 9.30 மணி |
| 2 | திருவள்ளூர் கிழக்கு | மதியம் 12.00 மணி |
| 3 | திருவள்ளூர் மத்திய | மதியம் 2.00 மணி |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அனைவருக்கும் வாழ்த்துகள்!

“அன்பகம்”
சென்னை – 18.
நாள் : 05–09–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

